**கேகாலை நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கேகாலை நகர சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டக் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளை சட்டத்தின் (255 அத்தியாயம்) 181(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் கேகாலை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மத்திய சந்தையில் தீபற்றிய கட்டிடத்தின் இழப்பை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்காததுடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைத்த ரூபா 5,000,000 காப்புறுதி இழப்பீட்டை, காப்புறுதி இழப்பீட்டு கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக வைப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மதிப்பீட்டு காப்புறுதி காப்பிலிருந்து மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 13,574,156 கிடைக்க வேண்டிய காப்புறுதி இழப்பாக கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | தீபற்றிய கட்டிடத்தின் இழப்பு மற்றும் திருத்த வேலைகள் 2021 ஆண்டு நிதிக்கூற்றில் கணக்கீடு செய்யுமாறு அலுவலர்களை அறிவூட்டியதாகவும் எதிர் காலத்தில் காப்புறுதி மற்றும் இழப்பீட்டு கணக்கை ஆரம்பிப்பதற்கு உரிய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரிசெய்ய வேண்டும். |
| (ஆ) | ஆண்டின் இறுதி 04 மாதங்களிற்காக முத்திரை கட்டண அட்டவணையை பெற்றுக் கொள்ளாது 2019 ஆண்டு அம் மாதங்களிற்குரிய ரூபா 4,899,951 பெறுமதியை மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது ஜர்னல் குறிப்பூடாக சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரிசெய்ய வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்காக 2019 ஆண்டில் கிடைத்த ரூபா 991,384 ஆன வீதவரிக்கு கொடுத்த கழிவை கணக்கிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | வீதவரிக்காக குறித்த கழிவு வழங்கல் அமுலாவது வருடாந்தம் பிரசுறிக்கப்படும் வர்தமானியின் பிரகாரமென அறிவிக்கப்பட்டள்ளது. | மீளாய்வாண்டிற்காக முன்ளைய ஆண்டில் கிடைத்த வீதவரிக்கு கொடுத்த கழிவை கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 150,000 கூடுதலாக கணக்கீடு செய்ததால் ஆண்டின் மிகை அவ் அளவினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு ஜர்னல் குறிப்பு மூலம் அதனை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரி செய்ய வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார பெறுமதி ரூபா 6,526,737 மற்றும் அட்டவணை பிரகார பெறுமதி ரூபா 6,471,988 ஆனதில் ரூபா 54,749 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | முற்பண வித்தியாசம் பதிவேட்டில் குறிப்பிடுகையில் ஏற்பட்ட வித்தியாசம் எனவும் நூலக புத்தக மீதி நீண்ட காலமாக கணக்கீடு செய்கையில் நிகழந்துள்ள தவருகளின் காரணமாக ஏற்பட்ட வித்தியாசம் ஒனறாகையால் எதிர்காலத்தில் சபைக்கு முன்வைத்து பதிவலிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதனுடன் தொடர்புடைய அட்டவணைகளுடன் இணங்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 71,627,845 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 81,870,582 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) வீதவரி மற்றும் குத்தகை | | |
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 2,544,790 ஆனது. அவ்வாறே சுற்றறிக்கை பிரகாரம் வீதவரி | கொவிட் தொற்று காரணமாக ஆதனத் தடை மேற்கொள்ளவில்லை எனவும், ஓராண்டை விஞ்சி நிலுவையாக உள்ள வீதவரியின் | நகர சபை கட்டளை சட்டம் பிரகாரம் செயற்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடாது 1999 ஆண்டு மேற்கொண்டிருந்த வீதவரி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டு வரை வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | பெறும் பகுதி உரிமை கோராத ஆதனம் காரணமாக வீதவரி அறவிட முடியாததால் ஆதன தடை மேற்கொள்ள முடியாது எனவும் வீதவரி மதிப்பீடு இதுவரை இடம்பெறவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வீதவரி அறவிட வேண்டியதுடன் வீதவரி மதிப்பீட்டு செயற்பாடுகளை சுற்றறிக்கை பிரகாரம் செய்ய வேண்டும். |
| (ஆ) | வாடகை<br>-------------- | | |
| | ஓராண்டை விஞ்சிய காலமாக நிலுவையாகவுள்ள கூட்டுத் தொகை ரூபா 1,276,392 ஆன வாடவை மற்றும் கட்டணம் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், அறவிட முடியாத கட்டணத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிக்கும் கட்டளையை பெற்றுக் கொள்ள கோரிக்கை முன்வைத்து மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம்<br>-------------------------------- | | |
| (i) | அறிவிட வேண்டிய அறிவித்தல் பலகை கட்டணம் நிலுவை மீதி ரூபா 324,240 ஆனது. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | ஓராண்டிற்கு விஞ்சிய காலமாக நிலுவையாகவுள்ள தண்டப்பண வருமானம் ரூபா 2,096,580 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட முடியாத தண்டப்பணத்தை புத்தகங்களிலிருந்து அகற்றல் கட்டளையை பெற்றுக் கொள்ள கோரிக்கை முன்வைத்து மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஏனைய பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபை கட்டளை சட்டத்தின 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய மூலதன உதவிப் பெறுமதி ரூபா 14,985,275 ஆனது. | கிடைக்க வேண்டிய மீதிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய மீதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். |

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகாறி 03 பதவிகளில் கணக்காளர் மற்றும் நிர்வாக சேவை உத்தியோகத்தர் பதவிகள் இரண்டும் வெற்றிடமாக காணப்படுவதுடன நகர சபைக்கு அத்தியவசிய சேவையான பொது சுகாதார பரிசோதகர் பதவியும் வெற்றிடமாகவுள்ளது. இவ்வெற்றிடம் தொடர்பாக மாதாந்தம் குறித்த அதிகாரிகளுக்கு அறிக்கையிட்டுள்ள போதும் அவ்வெற்றிடத்தை நிரப்பியிருக்கவில்லை. | பதவி வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் மாதாந்தம் உயர் முகாமைக்கு முன்வைக்கப்பட்ட போதும் இது வரை அதற்காக பொருத்தமான தீர்வு கிடைக்கவில்லை எனவும் அனைத்து நிறந்தர நியமனங்களும் சபரகமுவ மாகாண சபையினால் மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |